பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 31 வெள்ளிக்கிழமை 18.11.2022 கதிர் 265

## மினுவாங்கொடையில் இருவர் சுட்டுக்கொலை

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம், மினுவாங்கொடை பொல்வத்தை, பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் 2

### பிறந்தநாள் கொண்டாடும்

## மஹிந்தவை நேரில் வாழ்த்திய சீனத் தூதர்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நேற்று சீனத் தூதுவர் குய் சென் ஹாங் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துள்ளார்.

அத்தோடு, இன்று பிறந்த நாள் கொண்டாடும் முன்னாள் ஜனாதிபதி 2

## தமிழர் தாயகத்தில் இம்முறை பேரெழுச்சியுடன் மாவீரர் நாள்



### ஏற்பாடுகள் தீவிரம்

தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இம்முறை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு எங்கும் பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பாட்டு ரீதியாக மௌனித்த பின்னர் வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியத்தை 2

# தமிழ்க் கூட்டமைப்பின் அழைப்பை வரவேற்கின்றார் கஜேந்திரகுமார்

### சமஷ்டியை மீண்டும் நிகழ்ச்சி நிரலில் முன்வைப்பது மிக நல்லது என்கிறார்



**சமஷ்டியை 'மீண்டும் நிகழ்ச்சி நிரலில்' வைப்பதற்காக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்ற தமிழ்க் கட்சிகளை விவாதத்திற்கு அண்மையில் அழைத்தமை வரவேற்கத்தக்கது எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குத் தலைமை தாங்கும் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.** 8

### யாழ். மாநகர சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் துரைராஜா ஈசன் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க சபை உறுப்பினர்கள், 2

### போதைப்பொருளுடன் 3 இளைஞர்கள் கைது

யாழ்., வடமராட்சி, நெல்லியடியில் போதைப்பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸார் மோப்ப நாயுடன் நேற்று நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 80 கிராம் கஞ்சாவும், 2


### 14 தமிழக மீனவர்களும் 21 வரை விளக்கமறியலில்

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 14 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் 2

## குருநாகலில் இன்று கோர விபத்து; இராணுவ மேஜர் உட்பட மூவர் சாவு







குருநாகலில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ மேஜர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இராணுவ மேஜர் உட்பட்டவர்கள் பயணித்த கார், வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மதிலில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது வாகனத்தில் ஐந்து 2

### ஜே.வி.பியை விடவும் புலிகள் உத்தமர்கள்!

இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



வரலாற்றில் ஜே.வி.பி. இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் போல் விடுதலைப்புலிகள் கூட செய்யவில்லை. ஜே.வி.பியினருடன் ஒப்பிடும்போது விடுதலைப்புலிகள் உத்தமர்கள்.

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார். 8

### 'இறந்தவர்களை நினைவுகூரத் தடை' முல்லைத்தீவில் பொலிஸார் மிரட்டல்

முல்லைத்தீவில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை காரணம் கூறாது பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்த முல்லைத்தீவு பொலிஸார், 'இறந்தவர்களை நினைவுகூரத் தடை' என்று தெரிவித்ததுடன், இது தொடர்பில் இன்பல அறிவுறுத்தல்களையும் விடுத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் முல்லைத்தீவில் மாவட்ட தலைவி ம.ஈஸ்வரி, இலங்கைத் தமிழரசுக்கட்சி மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு நகர வர்த்தக 2

## 2 வயது பெண் குழந்தையின் உடலில் ஐஸ் போதைப்பொருள்

### யாழ். போதனாவில் ஆபத்தான நிலை

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான தந்தையால் 2 வயதுப் பெண் குழந்தை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு, கொக்கிளாயைச் சேர்ந்த 2 வயது பெண் குழந்தை காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குழந்தையின் உடலில் 2

## குருநாகலில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேர் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 35 வயதுடைய இராணுவமேஜரும், 30, 36 வயதுடைய இரண்டு இளைஞர்களும் பலியாகியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் கல்கமுவ மற்றும் பொலனறுவை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மினுவாங்கொடை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஊரகஹ பிரதேசத்தில் நபர் ஒருவரைச் சுட்டுக் கொன்றமை மற்றும் யக்கலமுல்ல பகுதியில் கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி நான்கு வயது சிறுவன் மற்றும் அவரது தந்தை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபரையும் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரையும் கைதுசெய்ய சென்ற போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி மினுவாங்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும், தற்போது வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் ஒன்றின் தலைவரும்பாரியளவிலானபோதைப்பொருள் கடத்தல்காரருமான ஊரகஹ இந்திக்கவின் பிரதான உதவியாட்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் போத்தல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றும், போர - 12 துப்பாக்கி ஒன்றும், ரம்போ ரக கத்தி ஒன்றும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இறந்தவர்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்க தலைவர் க.கௌரிராசா, சமூக செயற்பாட்டாளர்களான பேதுருப்புள்ளை ஜெபநேசன், சிவநேசராசா ஆகியோரின் வீடுகளுக்கு சென்ற பொலிஸார் ஒரு காகிதத்தில் அழைப்பை எழுதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு மாலை 5 மணிக்கு (நேற்று) வருமாறு கூறிவிட்டு சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்றவர்களை அச்சுறுத்தும் வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக வகுப்பெடுத்துள்ளனர்.

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தலைமை வகிக்கக்கூடாது எனவும் பொலிஸார் தெரிவித்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியையும் பொலிஸார் கொடுத்து அதை வாசிக்கும்படி தெரிவித்து அவர்களை மிரட்டி அனுப்பியுள்ளனர்.

## 14 தமிழக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 14 பேர் நேற்றுமுன்தினம் (16) இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் , மேலதிக சட்டநடவடிக்கைகாக கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைகளத்தினர் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று (17) முற்படுத்தப்பட்டனர்.

அதையடுத்து மீனவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

## யாழ்.மாநகர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவீரர்களுக்கு இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவர்கள் தலைமையில் சபைமண்டபத்தில்நேற்று இடம்பெற்றது. இதன்போது, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நவம்பர் 27 ஆம் திகதி வரை மாவீரர்வாரம்அனுஷ்டிக்கப்படவுள்ளது. இருப்பினும், யாழ். மாநகர சபையின் அடுத்த அமர்வு மாவீரர் நாள் முடிந்த பின்பே வரவுள்ளதால் இன்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது பொருத்தமாகயிருக்கும் என்று பிரதி மேயர் ஈசன் முன்வைத்த வேண்டுகோளை ஏற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## போதைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
83 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கரணவாய், தும்பளை, குடவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 - 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

## 2 வயது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐஸ் போதைப்பொருள் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் குழந்தையின் தந்தை உயிர்க்கொல்லி ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குழந்தை வீட்டிலிருந்து போதைப் பொருளை விளையாட்டாக எடுத்து உட்கொண்டு இருக்கலாம் என்று விசாரணைகளில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலியுறுத்தும் கட்சிகளும், தமிழ் உணர்வாளர்களும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், வடக்கு - கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம்மூலம்துப்புரவுசெய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியினரும்பல இடங்களில் பொது மக்களுடனும், மாவீரர்களின் உறவினர்களுடனும் இணைந்து மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்து வருகின்றனர்.

## மஹிந்தவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மஹிந்த ராஜபக்சவுக்கு சீனா சார்பாக பிறந்தநாள் வாழ்த்தையும் தெரிவித்துள்ளார்.

இதன்போது, சீனத் தூதுவருக்கு நன்றி தெரிவித்த மஹிந்த ராஜபக்ச, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேணப்பட்டு வரும் வலுவான உறவுகளையும், நீண்டகால நட்புறவையும் இதன்போது நினைவுகூர்ந்தார்.

076 443 8622




40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்

douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10

0777755598 I 0701630209 I 0772211211
www.dslsolarenergy.com

MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC Sampath Bank COMMERCIAL BANK HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## இப்போது ஐக்கியம் முக்கியம்

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த தீர்மானம் – அபிலாஷை சமஷ்டிதான் என்பதை தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒன்றுபட்டு வலியுறுத்தும் ஒரு சூழல் ஏற்பட்டிருப்பது தமிழர்கள் மத்தியில் நிச்சயம் ஒரு மன தைரியத்தை தந்திருக்கின்றது.

நம் அபிலாஷை சமஷ்டிதான் என்று ஒரு குரலில் பேச வாருங்கள் எனும் கூட்டமைப்பின் அழைப்பை 'த இந்து' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரவேற்று இருக் கின்றமை நல்லதொரு திருப்பம்.

இதுவரை காலமும் கொழும்பு அரசுடன் பேச்சுக்கள் நடத்திய தமிழ் தேசிய கூட்டமைப்பு சமஸ்டி என்ற தீர்வை திட்டவட்டமாக வலியுறுத்தவில்லை எனும் குறையை கஜேந்திரகுமார் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

மைத்திரி – ரணில் அரசுடன் 2015 – 2019 வரையான காலப் பகுதியில் கூட்டமைப்பு பேச்சு நடத்தி முக்கால் திட்டம் வரை முன்னேறித் தயாரித்த அரசமைப்பு நகல் கூட உண்மையில் சமஷ்டி அல்ல என்பதே கஜேந்திரகுமாரின் விளக்கம்.

அந்தப் பின்புலத்தில் இப்போது 'சமஷ்டி நிகழ்ச்சி நிரலை' முன்வைப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றத் தமிழ்க் கட்சிகளைப் பேச்சுக்கு அண்மையில் அழைத்தமை வரவேற்கத்தக்கது என்று 'த ஹிந்து' நாளேட்டுக்கு கூறியுள்ள கஜேந்திரகுமார், கூட்டமைப்பு அழைத்துள்ள அந்தக் கூட்டத்திற்கு தான் போவாரா, அது தொடர்பான கலந்து ரையாடலில் பங்குபற்றுவாரா என்பவற்றைத் தெளிவுபடுத்தவில்லை.

அந்த அழைப்பை அவர் வரவேற்கின்றமையால் இனி அந்த கூட்டத்தில் அவரும் கலந்து கொண்டு கருத்து தெரிவிப்பார் என எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் ஒன்றுபட்ட அபிலாஷை சமஷ்டி முறையிலான தீர்வுதான் என்ற ஒற்றைக் கருத்தை தமிழர் தேசமாக நாம் முன்வைத்து நின்றால்தான் அந்த கோரிக்கை வலிமை பெறும்.

அப்படி தமிழர் தேசமாக நாம் கிளர்ந்தொழுவதற்கு தமிழர்களுக்கு இடையிலான ஐக்கிய முக்கியமா கும்.

நாம் வலியுறுத்தும் சமஷ்டி வடிவம் யாது, அதன் கட்டமைப்பு எத்தகையது , அதன் பொருத்தப்பாடு எவ்வாறானது என்பவை பற்றி எல்லாம் நாம் ஆறுதலாக, அமர இருந்து ஒய்வாக விவாதிக்கலாம்.

ஆனால் தீர்வு சமஷ்டி அடிப்படையில் தான் அமைய வேண்டும் என்பதில் நாம் தமிழர்கள் பிளவுபட இடம் அளித்துச் செயல்பட முடியாது: செயல் படக்கூடாது

சமஷ்டி விடயத்தில் தமிழர் தேசம் ஒன்றுபட்டு நிற்பதை – இந்தச் சமய சந்தர்ப்பத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் உறுதியாக ஐக்கிய பட்டிருப்பதை – நாம் வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

# முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் அரசாங்கத்தில் தமிழர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிட்டும்!

## என்கின்றார் மஹிந்த



முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் உள்ள இந்த அரசாங்கத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் அவநம்பிக்கையை துறந்து ஒருசில விடயங்களில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல ஆண்டு காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். – என்றார்.

நாட்டின் தேசிய பிரச்சினையாகவுள்ள தமிழ் மக்களின் பிரச்சசினைகளுக்கு இந்த அரசில் பேச்சு ஊடாகத் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# மடு .பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இராணுவத்தினரால் வீடு கையளிப்பு!

மடு .பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சால் வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடு நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, பயனாளியால் முழுமையாகக் கட்டி முடிக்க முடியாத காரணத்தால் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இராணுவத்தினர் முழுமையாகக் கட்டி முடித்தனர்.

மேலும் குறித்த வீட்டிற்கு தேவையான சில தளபாட பொருட்களையும் இராணுவத்தினர் வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் வன்னி இராணுவக் கட்டளைத் தளபதி, மடு பிரதேச செயலாளர் கே.வி. நிஜாகரன் உதவி பிரதேச செயலாளர் ஆகியோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


# மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் மரம் நடுகை!

வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா நேற்று (வியாழக்கிழமை) யாழ். மாவட்டத்தில் கல்லுண்டாய் பகுதியில் நடைபெற்றது.

இந்த மரம் நடுகை விழாவை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் மீன்பிடி பிரிவு ஆகிய இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்த மரம் நடுகை நிகழ்வு வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் நடைபெற்றிருந்த நிலையில் இதில் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களபணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உரும்பிராய் ஐயப்பன் ஆலயத்தின் மகரஜோதி மண்டலப் பெருவிழா!





யாழ்.உரும்பிராய் தெற்கு சாட்டுபத்தூர் சபரிபீடம் அருள்வளர் சிவதர்மசாஸ்த்தா தேவஸ்தானத்தில் ஜெயவத்ஸாங்க குருசுவாமி திருமாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) கார்திகை மாதம் முதலாம் நாள் பகல் 10 மணி தொடக்கம் மகாகணபதி ஹோமம், பக்தர்கள் திருமாலை அணிந்து விரதம் எடுத்துகொள்ளும் வைபவம் இடம்பெற்றது.

இந்த ஆலயத்தில் நேற்று முதல் எதிர்வரும் தை மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை தைப்பொங்கல் திருநாளன்று இடம்பெறும். மகரஜோதிப் பெருவிழா வரை தொடர்ந்தும் 60 நாள்களுக்கு மண்டல விரத பூசைகள் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

தினசரி மாலை 6 மணியளவில் அபிகேம் பூஜை பஜனை படிப்பூஜை நடைபெறும். அனைத்து ஐயப்ப சாமிமார்களும் கலந்து கொள்ளுமாறு ஆலய தர்மகத்தா கேட்டுக்கொள்கிறார்.

# காசாவில் அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ! 21 பேர் உடல் கருகிச் சாவு: பலர் காயம்!





ஜெருசலேம், நவ.18

பாலஸ்தீனத்தின் காசாவின் ஜபாலியா பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இன்று திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 21பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலர் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்என் றும் கூறப்படுகின்றது.


இந்தக் கட்டடத்தில் தீ மளமளவென பரவி அடுக்கு மாடி கட்டடம் முழுவதும் தீ கொளுந்துவிட்டு எரிந்ததுடன், கரும்புகை வெளியேறியதால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சி அளித்ததாகவும், இந்த தீவிபத்தில் மூச்சுத் திணறி மற்றும் உடல் கருகி 21 பேர் பரிதாபமாக உயிரிழந் தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் 7 குழந்தைகளும் அடங்குவர். அவர்களது உடல்களை தீயணைப்பு படையினர் மீட்டுள்ளனர். மேலும், உயிரிழந்தவர்களின் முழு விவரங்கள் உடனடியாக தெரியவில்லை என்றும் இந்த விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் உள்ளூர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்களை உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலும், தீ விபத்து குறித்து தகவலறிந்த பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் இரங்கல் தெரிவித்ததுடன், தேசிய அளவில் துக்கம் அனுசரிக்கப்பட்டு கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறி வித்தார்.

அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து ஏற்பட்டு 21 பேர் பலியானது காசாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடர் பொருளாதார மந்தநிலைமையே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நீடிக்கும்!




பிரசல்ஸ், நவ.18

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பித்தது. இந்தத் தாக்குதலுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வரலாறு காணாத பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதன் எதிரொலியாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கடுமையான எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இந்த ஆண்டு குளிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அதிகரித்து வரும் நிலையற்ற தன்மை மற்றும் பணவீக்கத்தால், கடுமையான பொருளாதார மந்தநிலை ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதனால் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி குறைவு, சர்வதேச வர்த்தக சூழலில் பாதிப்பு ஆகியவை ஏற்படலாம். என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 3.3 சத வீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ந்த ஆண்டின் கடைசியில் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சி அடையும் என்றும், அடுத்த ஆண்டின் முதல் காலாண்டிலும் இதே நிலை நீடிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் ஐரோப்பிய ஒன்றியத்தில் 2023 ஆம் ஆண்டு பணவீக்கம் 7 சதவீதத்தை எட்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மியான்மாரின் தேசிய தினத்தில் 5,774 கைதிகளுக்கு மன்னிப்பு

மியான்மர், நவ.18

மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சி நடந்து வருகின்ற நிலையில், அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்பட தலைவர்களை இராணுவம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளதுடன், வெளிநாட்டினர் சிலரும் கைதாகி சிறையில் உள்ளனர்.

இந்தநிலையில் மியான்மர் நாட்டின் தேசிய தினத்தையொட்டி சிறையில் இருந்து 5,774 கைதிகளுக்கு மியான்மரின் மாநில நிர்வாக சபை பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், பொது மன்னிப்புப் பெற்றவர்களில் இங்கிலாந்து முன்னாள் தூதர் விக்கி பவ்மேன், ஆஸ்திரேலிய பொருளாதார நிபுணர் சீன் டர்னெல், ஜப்பானிய பத்திரிகையாளர் டோரூ குபோடா மற்றும் முன்னாள் அமைச்சர்கள், கலைஞர்கள் ஆகியோரும் அடங்குகின்றனர்.

தூதராக பணியாற்றிய விக்கி பவ்மேன் தனது வெளிநாட்டவரின் பதிவுச்சான்றிதழில் குறிப்பிட்ட முகவரியில் இருந்து வேறு முகவரியில் வசிப்பதை தெரிவிக்க தவறியதால் கைது செய்யப்பட்டார். அவரது கணவர் ஹெட்டீன் லின்னும் கைது செய்யப்பட்டார். அவரும் விடுதலை செய்யப்பட் டுள்ளார். சீன் டர்னெல், மியான்மர் தலைவர் ஆங் சான் சூகிக்கு ஆலோசகராக செயல்பட்டவ ஆவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






## குவைத்தில் 7 பேருக்கு ஒரேயடியாகத் தூக்கு!

குவைத், நவ.18

குவைத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் ஏழு பேருக்கு ஒரேநேரத்தில்,ஒரேஇடத்தில்மரணதண்டனைநிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த நாட்டில் இது போன்ற கூட்டு மரண தண்டனை நிறைவேற்றம் மிகவும் அபூர்வம் என்று குறிப்பிடப்படு கின்றது.

இது குறித்து அரசுக்குச் சொந்தமான 'குனா' செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலின் படி, பல்வேறு குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர் மத்திய சிறைச் சாலையில் நேற்று தூக்கிலிடப்பட்டனா. மரண தண்டனை நிறைவேற்றப் பட்டவர்களில் 3 குவைத் நாட்டு ஆண்கள், ஒரு குவைத் நாட்டுப் பெண், ஒரு சிரியா நாட்டவா, ஒரு பாகிஸ்தானியா, ஒரு எத்தியோப்பிய பெண் அடங்குவர். – என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், மனிதாகளின் மிகவும் புனிதமான உரிமையாகிய உயிர் வாழும் உரிமையை அவாகள் பிறரிடமிருந்து பறித்ததால் இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அரசுத் தரப்பு நீதித் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

இதற்கு முன்னர் கடைசியாக 2017 ஜனவரி 25 ஆம்

திகதி அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 7 பேர் தூக்கிலிடப்பட்டிருந்த நிலையில் நேற்று குவைத் 7 பேரை தூக்கிலிட்டுள்ளது.

இந்தத் தண்டனைகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்பு சபை, 'இதுபோன்ற தண்டனைகளை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், இவை கொடூரமானவை, மனிதத் தன்மையற்றவை மற்றும் கீழ்த்தரமானவை' என்று விமர்சித்துள்ளதுடன், இந்த மரண தண்டனை நிறைவேற்றத்துக்கு ஐரோப்பிய யூனியனும் கண்டனம் தெரிவித்துள்ளது.

குவைத்தில்1960தொடங்கிமரணதண்டனைநிறைவேற்றப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணிற்குப் பாய்ந்தது!




சென்னை, நவ.18

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து, முழுமையாக தனியார் தயாரித்த ராக்கெட்டை இன்று வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

தெலுங்கானா தலைநகர் ஐதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும், 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' என்ற நிறுவனம் 'விக்ரம்-எஸ்' என்ற இந்த ராக்கெட்டை தயாரித்து உள்ளது. இந்தப்பணிக்கு 'பிரரம்ப்' என பெயரிடப்பட்டு உள்ளது. இது இந்தியாவில் தனியாரால் தயாரிக்கப்பட்ட முதல் ராக்கெட்டாகும்.

83 கிலோ எடையை தூக்கி செல்லும் இந்த ராக்கெட் 2 இந்திய செயற்கைகோள்கள், ஒரு வெளிநாட்டு செயற்கைகோள்கள் உள்பட 3 செயற்கைகோள்களை சுமந்து சென்றது. ஒரே நிலையை கொண்ட இந்த ராக்கெட் 545 கிலோ எடையும், 6 மீட்டர் உயரமும், 0.375 மீட்டர் விட்டமும் கொண்டதுடன் 7 டன் உந்து சக்தியை கொண்டிருந்தது.

இந்த 3 செயற்கைகோள்களும் பூமியின் மேற்பரப்பில் இருந்து 120 கி.மீ. உயரத்தில் 300 வினாடிகளில் கொண்டு சென்று நிலை நிறுத்தப்பட்டன. பூமியில் இருந்து தகவல்களை திரட்டுவதற்கு இவை பயன்படுத்தப்படுகின்றன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# 18வயதுக்கு உள்பட்டோர் தொலைபேசி பயன்படுத்த மராட்டிய கிராமத்தில் தடை



யவத்மால், நவ.18

யவத்மாலில் உள்ள ஒரு கிராமத்தில் 18 வயதுக்கு உட்பட்டோர் தொலைபேசி பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பன்சி கிராம பஞ்சாயத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுபற்றி அந்த கிராம பஞ்சாயத்து தலைவர் கஜானன் டேல் தெரிவிக்கையில் –

சிறுவர், சிறுமிகள் தற்போது தொலைபேசிகளில் வீடியோ கேம் விளையாடுவதற்கும், சமூக வலைத்தளங்களில் உலாவுவதற்கும் அடிமையாகி விட்டனர். இதனால் சிறிய குழந்தைகள் தொலைபேசிகளுக்கு அடிமையாவதைத் தடுக்க கிராமசபையில் முக்கிய முடிவு எடுத்தோம். இதன்படி 18 வயதுக்குள்பட்டவர்கள் தொலைபேசி பயன்படுத்த முடியாது. இந்த முடிவைச் செயல்படுத்தும் போது தொடக்கத்தில் சிரமங்கள் இருக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக செயல்படுத்த பெற்றோர் மற்றும் பிள்ளைகள் இருதரப்புக்கும் 'கவுன்சிலிங்'

வழங்கப்படும். அதன்பிறகும், சிறுவர்களுக்கும் தொலைபேசி பயன்படுத்துவதை பார்த்தால் அபராதம் விதிக்கப்படும். குழந்தைகளை மீண்டும் படிக்க செய்ய வேண்டும், தொலைபேசிகளால் திசை திருப்பப்படாமல் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.–என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாவட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், மராட்டியத்தில் உள்ள கிராமத்தில் தான் முதல்முறையாக இதுபோன்ற தடை விதிக்கப்பட்டு உள்ளது. ஆச்சரியப்பட வைக்கும் முறையில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது. இதனை எடுத்துக்காட்டாக கொண்டு மற்ற கிராமங்களிலும் முயற்சி செய்ய தன்னார்வ தொண்டர்கள் முன்வர வேண்டும் என்றுள்ளார்.

## ஜல்லிக்கட்டுப் போட்டி வழக்குக்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் இடையீட்டுமனு தாக்கல்

புதுடெல்லி, நவ.18

ஜல்லிக்கட்டு போட்டிகளை அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் அவசர சட்டத்தை ரத்துச் செய்யக்கோரி விலங்கு நல வாரியம், பீட்டா உள்ளிட்ட அமைப்புகள், உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளன. இந்நிலையில், நிலுவையில் உள்ள அம்மனுக்களை உச்ச நீதிமன்று அரசியல் சட்ட அமர்வு நவம்பர் 23 ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உள்ளது.

இதற்கிடையே, முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் சார்பில் சட்டத்தரணிமாளவிகா ஜெயந்த் ஒரு இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார். அதில் அவர்கூறியிருப்பதாவது:-



ஜல்லிக்கட்டு போட்டிகள் இல்லாமல் போயிருந்தால்காங்கேயம் ரக பசுக்களும், காளைகளும் மறைந்து போயிருக்கும். ஜல்லிக்கட்டு போட்டிகள் வெறும் கலாசாரம் தொடர்புடையவை மட்டுமல்ல. மாறாக, பாரம்பரிய ரக பசுக்களையும், காளையையும் பாதுகாக்கவும் உதவுகின்றன. பாரம்பரிய மாடுகளை பாதுகாக்கும் அடையாள, அங்கீகாரமாக ஜல்லிக்கட்டு திகழ்ந்து வருகிறது.

மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் குறிப்பாக காளைகளுக்கும் இடையேவுள்ள பிணைப்பை எடுத்துக்காட்டும் தொன்மையான, பண்பாட்டு அடையாளமாக ஜல்லிக்கட்டு உள்ளது. ஜல்லிக்கட்டு பெருமளவில் நடைபெறும் பகுதியின் மக்கள்பிரதிநிதியாகவும், காளைகளை வளர்த்து, கலாசார, பாரம்பரிய ஜல்லிக்கட்டில் பங்கேற்று வரும் மனுதாரரின் இடையீட்டு மனுவை ஏற்றால், அது நீதிமன்றுக்குபெருமளவில் உதவியாக இருக்கும். என்று அவர் கூறியுள்ளார்.



# சபரிமலைக்குப் பெண்களுக்கு அனுமதி இல்லை வழமையான நடைமுறையே தொடர்ந்தும் நீடிப்பு

கேரளா, நவ.18

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் வழிபடுவதற்க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வெளியாகிய செய்தி தவறு என்றும், வழமையான நடைமுறை யின் படியே 10வயதுக்கு கீழும், 50 வயதுக்கு மேலும் உள்ள பெண்கள் மட்டுமே சபரிமலைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சபரிமலை நடைமுறைகளுக்கு மாறாக 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்களை அனுமதிக்கும்படி கடந்த 2018ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைத்தொடர்ந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டங்கள்நடைபெற்றன. உச்ச நீதிமன்ற உத்தரவிற்குப் பின்னர் கோவில் நடை

திறக்கப்பட்டபோது, 10 வயது முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் பலர், சபரிமலைக்கு செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், பக்தர்களின் கடும் எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக அவர்களால் செல்ல முடியவில்லை.




பின்னர், உத்தரவுக்கு எதிர்ப்பு மற்றும் கொரோனா பரவல் காரணமாக இதுவரை அமுல்படுத்தப்படாமல் இருந்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு தற்போது அமுலுக்கு வந்துள்ளதாகவும், இதையடுத்து, சபரிமலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும் எனவும் பொலிஸாருக்குக் கேரள அரசு அறிவுறுத்தியதாகத் தகவல் வெளியானது.

இந்நிலையில், சபரிமலையில் அனைத்து பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்ற கேரள அரசின் அறிவுறுத்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. தவறாக அச்சிடப்பட்டு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக கேரள தேவசம் போர்டு அமைச்சர் ராதாகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார்.

மேலும், வழிகாட்டு நெறிமுறை புத்தகம் அனைத்தும் திரும்ப பெறப்பட்டுள்ளன எனவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள 10 வயதுக்கு கீழும், 50 வயதுக்கு மேல் உள்ள பெண்கள் மட்டுமே சபரிமலைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிழக்கில் கிராம அபிவிருத்தி திணைக்கள தகவல்கள் தரவுத்தளம் அங்குரார்ப்பணம்



(அபு அலா)

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தகவல்கள் முகாமைத்துவ தரவுத்தளம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று மாலை மாகாண பிரதிப் பிரதம செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

தகவல்கள் முகாமைத்துவ தரவுத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்ட நோக்கம் பற்றியும், தரவுத்தளத்தில் எவ்வாறு உள்நுழைவது மற்றும் பதிவுகளை எவ்வாறு பதிவிடுவது பற்றிய முழுமையான தகவல்களை அதிதி உள்ளிட்ட மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்களுக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் நாகராஜா தனஞ்ஜெயன் மிக விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில், ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், விவசாய அமைச்சின் செயலாளர் எல்.கே.ஜி.முத்துபண்டா, பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளனி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜெலீல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குலதீபன் உள்ளிட்ட மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் தகவல்கள் முகாமைத்துவ முறைமையில் தரவுத்தளத்தில் கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தரவுகளை பதிவேற்றம் செய்ததில் மாகாணத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கு ஆளுநர் சான்றிதழ் வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நிலாவெளியில் பயிற்சி முகாம் நூறு இளைஞர், யுவதிகளுக்கு

## தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு நடக்கும்



(ஹஸ்பர்)

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து இளைஞர் பயிற்சி முகாமொன்றை எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை குச்சவெளி பிரதேச செயலகப் பகுதியின் நிலாவெளியில் நடாத்த உள்ளது .

மட்டக்களப்பு , திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த 100 இளைஞர், யுவதிகள் இதில் கலந்து கொள்ள வுள்ளனர்.

தலைமைத்துவம் உள்ளிட்ட பல துறைசார் விடயங்களை உள்ளடக்கியதாக இப்பயிற்சி முகாம் அமையப்பெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமை சிறப்பாக நடாத்துவதற் கான ஏற்பாடுகளை ஆராயும் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது. இதன்போது குறித்த பயிற்சி முகாமை நடாத்து வதற்கான ஒழுங்கேற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப் பாளர்(தேசுய இளைஞர் சேவைகள் மன்றம்), முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# போதை பொருள் விற்ற அரச ஊழியர் சிக்கினார்

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டை நேற்று (வியாழக்கிழமை) முற்றுகையிட்ட பொலிஸார் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள காரியாலயம் ஒன்றில் கடமையாற்றிவரும் 28 வயதுடையவரை 2050 மில்லிக்கிராம் ஹரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்பு தலைமையகப் பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய பொலிஸ் பலனாய்வுப் பிரிவினர் இந்த நபரைக் கண்காணித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் போதை பொருள் வியாபாரியின் வீட்டை மட்டு தலைமையக பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜி.எம்.எஜ் கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் உள்ளிட்ட பொலிஸார் சம்பவதினமான நேற்றுக் காலை 10 மணியவில் முற்றுகையிட்டபோது வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வியாபாரியை 2050 மில்லிக்கிராம் ஹரோயின் போதை பொருளுடன் கைது செய்தனர்.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள காரியாலயத்தில் பணியாற்றிவரும் இவர் கடந்த இரண்டு மாதங்களாக வேலைக்கு செல்லவில்லை எனவும், அவருக்கான சம்பளம் வழங்கப்படவில்லை எனவும், அவர் வீட்டில் இருந்து தினமும் வேலைக்கு செல்வதாகத் தெரிவித்து சென்று வேலைக்கு செல்லாது போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு பின்னர் வேலைமுடிந்து வருவது போல மாலை 5 மணிக்கு வீட்டிற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கின்றார்.

வேலைக்கு சென்று சம்பளம் வந்தது போல போதை பொருள் வியாபாரத்தின் ஊடாக கிடைத்த பணத்தை மனைவியிடம் வழங்கிவந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



# மட்டு. - கொழும்பு ரயிலில் மோதுண்டு ஜீப் கடும் சேதம்






(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பில் இருந்து இன்று காலை கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயிலுடன் மோதுண்ட ஜீப் பலத்த சேதமடைந்தது.

இச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மொறக்கட்டான்சேனை தேவபுரப் பகுதியில் இடம்பெற்றது .

மட்டக்களப்பில் இருந்து இன்று காலை எட்டு மணியளவில் புறப்பட்ட ரயில் ஒரு மணி நேரத்தில் தேவபுரப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது பாதுகாப்பற்ற ரயில் கடவையால் குறுக்காக வந்த ஜீப்பை மோதித் தள்ளியது. எனினும் தெய்வாதீனமாக சாரதி உயிர் தப்பினார்.

இந்த விபத்தில் சாரதி காயமுற்ற நிலையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ரயில் முன் பக்கமும் சிறிது சேதத்துக்கு உள்ளானது.

பொலிஸார் மேலதிக விசாரணை தொடர்ந்தனர். ரயில் சுமார் ஒரு மணி நேரம் தாமதித்து மீண்டும் கொழும்பு நோக்கி புறப்பட்டது.

# ‘மரம் நடுவோம்; தேசத்தை காப்போம்’ எனும் தொனிப்பொருளில் மரம் நடுகை முன்னெடுப்பு!



மரம் நடுவோம் தேசத்தைக் காப்போம் எனும் தொனிப்பொருளில் மரம் நடுகை கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (வியாழக்கிழமை) இரணைமடுக் குளத்தை அண்டிய பிரதேசங்களில் 500 மரக்கன்றுகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவின் அனுசரணையுடன் கார்த்திகை மாதமான மரநடுகை மாதமாகக் கொண்டு நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விவசாய மற்றும் கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மீன்பிடி நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர்கள் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடதக்கது.

# சுயநல அரசியலைவிடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்ய நாம் பழகிக்கொள்ள வேண்டும்!

## ரெலோவுக்கு சாணக்கியன் சாட்டையடி

அண்மையில் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை விமர்சித்திருந்தார். இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்யப் பழகவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திராய்மடு மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியிலிருந்து மின்னொளி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டு மின்னொளி உபகரணங்களை பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் வழங்கிவைத்தார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் சமஷ்டியைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டமாகவே நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நான் இன்னும் கட்சி தலைவராக வரவில்லை.

அந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சம்பந்தன் ஐயா ஆகியோர் மட்டுமே அந்த கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.பலர் அந்த சந்திப்புக்குவருவதாக சொல்லியிருந்தாலும் அந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்ளாத கட்சிகளா என்பது எனக்கு தெரியாது.அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் என்றால் அவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரின் கருத்தை மதித்து அவர்கள் வந்திருக்கவேண்டும்.

அண்மையில் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சித்திருந்தார். இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்யப் பழகவேண்டும்.

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவா எதிர்ப்பா என்பது தொடர்பில் எங்களது நாடாளுமன்ற குழு கூடி தீர்மானத்தை எடுக்கும்.

இந்த வரவு – செலவுத் திட்டம் மிகவும் கவலைக்குரியதாகவுள்ளது. அரசாங்கம் விசேட தேவையுடையவர்களின் கொடுப்பனவைக் குறைத்துள்ளனர். விசேட தேவையுடையவர்களிடம் வழிப்பறி செய்யும் அரசாங்கமாகவே நாங்கள் இந்த அரசாங்கத்தைப் பார்க்கமுடிகின்றது.

ஒரு பக்கம் விசேட தேவையுடையவர்களின் கொடுப்பனவைக் குறைக்கும் அதேநேரம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர்களுக்கு அதிகளவு சலுகையைக் கொடுத்து அவர்களை ஒரு பக்கத்தில் பணக்காரர்களாக மாற்றும்போது இந்த விசேட தேவையுடையவர்களின் கொடுப்பனவைக் குறைத்தது மிகவும் கவலையான விடயம்.

இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் இவ்வாறானவர்களை இன்னும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். அதனைவிடுத்து அவர்களிடம் வழிப்பறி செய்வது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். – எனத் தெரிவித்தார்.

# வவுனியா மீள்குடியேற்றக் கிராமத்தில் முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைப்பு



வவுனியா றம்பைவெட்டி மீள்குடியேற்றக் கிராமத்தில் சிறுவர் கல்வி மேம்பாட்டு அமைப்பின் அனுசரணையில் முன்பள்ளிக் கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று (வியாழக்கிழமை) பட்டிமேடு சுப்பிரமணியம் சிதம்பரநாதன் செந்தூரனின் நிதி அனுசரணையில் தம்பலகாமம் சிதம்பரநாதன் அறக்கட்டளையால் மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி கட்டடத் திறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அறக்கட்டளையின் பொருலாளர் சு. பரமேஸ்வரன், சிறுவர் கல்வி மேம்பாட்டு அமைப்பின் தலைவர் சத்தியமூர்த்தி, வவுனியா தெற்கு கல்வி வலய முன்பள்ளி பிரதிப்பணிப்பாளர் வீ. பரஞ்சோதி, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் இந்து ஆரம்ப வித்தியாலய புதிய கட்டடம் நேற்று திறந்துவைக்கப்பட்டது

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரனால் நேற்று (வியாழக்கிழமை) மாணவர்களின் செயற்பாட்டுக்காக இந்தக் கட்டடம் கையளிக்கப்பட்டது.

கொரியா நாட்டின் நிதியில் கொய்க்கா திட்டத்தினூடாக இந்தக் கட்டடம் உருவாக்கப்பட்டது.

இதன் போது மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார் ,கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் கமல்ராஜா, பாடசாலையின் முதல்வர்.ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.





# இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் முத்திரைக் கண்காட்சி நடந்தது!

பாடசாலை மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கை ஏற்படுத்தும் நோக்கோடு முத்திரைக் கண்காட்சி கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. நேற்று (வியாழக்கிழமை) கொக்குவில் தபால் அலுவலகத்தின் தபால் அதிபர் தலைமையில் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவித்த தபால் அதிபர்–

முன்னைய காலங்களில் மாணவர்கள் முதல் பெரியவர் வரை முத்திரைகளைச் சேகரித்து அவற்றைக் காட்சிப்படுத்துதலும் முத்திரைகளை நினைவுச்சின்னமாக பேணி பாதுகாத்தலும் அதனூடாக வருமானத்தை மேம்படுத்தும் பொழுதுபோக்கு அம்சங்கள் காணப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது முத்திரை சேகரிக்கும் பழக்கம் மிகவும் அரிதாகவே உள்ளது அத்துடன் போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு மாணவர்கள் எதிர்காலத்தை வீணடிக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கை உருவாக்கும் நோக்குடன் இந்த முத்திரைக் கண்காட்சி இடம்பெற்றது.

## தமிழ்க் கூட்டமைப்பின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'த இந்து' பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளர் மீரா ஸ்ரீநிவாசனுக்குத் தாம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

இலங்கை நிலைமை தொடர்பாக மீரா ஸ்ரீநிவாசன் செய்திக் கட்டுரை ஒன்றை தமது பத்திரிகையில் இன்று வரைந்துள்ளார். அதிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையின் முழு வடிவம் வருமாறு:-

நவம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் தமிழ்க் கட்சிகளை இந்த வாரம் கலந்துரையாடலுக்கு அழைத்தார். அத்தோடு 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள தீவு நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் அவர்களின் (தமிழர்களின்) நிலுவையில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதாக உறுதியளித்தார். எனினும், இந்தக் கூட்டத்திற்கான திகதியை இன்னும் பெறாத நிலையில் தமிழ் அரசியல்வாதிகள், இந்த உத்தேச சந்திப்புத் தொடர்பில் மிகவும் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தலைவர்கள் பலர் கடந்த காலங்களில் தீவின் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதாக உறுதியளித்தனர். ஆனால், அவை எவையும் நிறைவேற்றப்படாமல் தவறாமல் தோல்வியில் முடிந்தன.

மிக சமீபத்தில், 2015 மற்றும் 2019 க்கு இடையில் ஆட்சியில் இருந்த மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம், புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சித்தது. ஆனால், பணியை முடிக்கவில்லை. இது அவர்களின் அரசை ஆதரித்த தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நமது 75 ஆவது சுதந்திர தினத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு முனைப்புடன் முயற்சிப்போம். நம் நாட்டின் விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடத் தேவையில்லை. எங்களுடைய பிரச்சினைகளை எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் மிகப்பெரிய குழுவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவரது அழைப்பை வரவேற்றதுடன், முழுமையாக ஒத்துழைக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், 89 வயதான நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.சம்பந்தன், பல தசாப்தங்களாக பல்வேறு சிங்களத் தலைவர்களுடன் அரசமைப்புத் தீர்வொன்றை மேற்கொள்ள முயற்சித்து வரும் நிலையில், ஜனாதிபதியின் உறுதிமொழி இம்முறை உண்மையானதாக இருக்கும் என நம்புகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சி அரசமைப்பை இல்லாதொழிப்பதற்கு தென்னிலங்கைத் தலைமை தயாராக வேண்டும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு முன்னதாகத் தெரிவித்துள்ளார்.

### சமஷ்டி மீது கவனம்

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஒரு கூட்டாட்சி அமைப்பில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அடைவதற்கான நோக்கத்தை நாம் அனைவரும் பகிர்ந்துகொள்வதால், இந்த வாரம் கலந்துரையாடலுக்கு அவர்களை (ஏனைய கட்சிகளை) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைத்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். திட்டமிட்டபடி தமிழ்க் கட்சிகளின் கூட்டம் நடைபெறவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீவிரத்தன்மை குறித்து சந்தேகங்களை எழுப்பும் அதேவேளையில், நாங்கள் அதை (தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தை) நடத்துவதில் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றார்.

### சுமந்திரன் அதிருப்தி

நவம்பர் 14ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேநீர் விருந்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மேற்படி சந்திப்பு (தமிழ்க் கட்சிகளுடனான) சந்திப்புக் குறித்துத் தாம் நேரில் கேட்டார் என சுமந்திரன் கூறினார்.

ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் வருவதாக ஜனாதிபதி என்னிடம் கூறினார். அவர் அறிவித்த இந்த வாரச் சந்திப்பு குறித்து அவரிடம் கேட்டபோது, வேண்டுமானால் இந்த வாரம் சந்திக்கலாம் என்றார். இது அவரது பதில்கள் எதையும் தீவிரமாக செய்ய தீவிரத்தன்மை இல்லை என்பதை காட்டுகிறது என்றார் யாழ். மாவட்ட எம்.பி. சுமந்திரன்.

அதிக அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வின் தேவை இலங்கையில் இந்திய ஈடுபாட்டின் மையமாகவும் உள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் அமர்வில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான தமது கடப்பாடுகள் குறித்து இலங்கையினால் அளக்கப்படக் கூடிய முன்னேற்றம் இன்மை குறித்து கவலையுடன் இந்திய பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகள் அதன் போதாமைகளை அடிக்கடி சுட்டிக்காட்டினாலும், இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கையை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

### கஜேந்திரகுமார் கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்கும் அதேவேளையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத் தலைமை தாங்கும் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஷ்டியை மீண்டும் நிகழ்ச்சி நிரலில் வைப்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்ற தமிழ்க் கட்சிகளை விவாதத்துக்கு அண்மையில் அழைத்தது வரவேற்கத்தக்கது என்றார்.

அவரது பார்வையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தைக் கூட்டினாலும், சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையில் விவாதத்தை நடத்துவதற்கு அவர் வெளிப்படையாக உறுதியளிக்காத வரையில், ஈடுபடுவதில் அர்த்தமில்லை என்கிறார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியுடனான உரையாடலை நினைவுகூர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனாதிபதி சமஷ்டியை நிராகரித்தார் என்றார். அப்படியானால், நாம் அவருடன் என்ன பேசப் போகிறோம்? அவர் தனது அரசு சட்டபூர்வமானது, நிலையானது, மேலும் அவர் அனைத்து நடிகர்களுடனும் பேசுகிறார் என்பதை உலகுக்கு காட்ட விரும்புகிறார். நாங்கள் பேச்சு மேசையில் இருப்பது அவருக்குத் தேவை, என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'த இந்து'விடம் தெரிவித்தார்.

அவர் ஜனாதிபதி தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உறுதிமொழியில் நேர்மையாக இருந்தால், சமஷ்டி என்பது இந்தப் பேச்சுக்களுக்கு முன் நிபந்தனையாக இருக்க வேண்டும். சிங்கள மக்களிடம் பொய் சொல்லாமல், அவர் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்றார்.

தமிழ்க் கட்சிகளுக்கு ஜனாதிபதியின் அழைப்புக் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மகிழ்ச்சியடையவில்லை என்றாலும், இந்த ஆண்டு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி இலங்கைக்கு ஆன்மாவைத் தேடுவதற்கான உண்மையான வாய்ப்பை வழங்கியுள்ளது என்கிறார்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தமிழர்களின் கவலைகளை தீர்க்கமாக நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக அவர் நம்பிக்கையுடன் உள்ளார்.

தெற்கு மக்கள் ஏமாற்றமடைந்தனர் என உணர்கிறார்கள். அவர்களின் தலைவர்கள் தங்கள் பெயரில் போர் புரிந்ததையும், அவர்களின் பெயரில் இனவாதக் கொள்கைகளை கடைப்பிடிப்பதையும் அவர்கள் காண்கிறார்கள். ஒரு நாடாக நாம் இப்போது ஒன்றாகச் செயல்பட முடிந்தால், நாம் நிச்சயமாக விவகாரங்களைச் சரிசெய்ய முடியும் என்று அவர் கூறினார்.

## ஜே .வி.பி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்துக் கூறியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:--

ஜே.வி.பியினரின் சண்டித்தனம் காரணமாக மே 9ஆம் திகதி எமது அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன. எல்லா வீடுகளும் ஒரே மாதிரி திட்டமிட்டபடி எரிக்கப்பட்டன.

வீட்டுக்குள் நுழைந்த காடையர்கள் முதலில் பாதுகாப்பு கமராக்களை உடைத்தனர். பின்னர் நீரைத் துண்டித்தனர். அடுத்து பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்தனர். இறுதியாக வீட்டுக்கும், வாகனங்களுக்கும் நெருப்புவைத்து எரித்து நாசமாக்கினர்.

ஜே.வி.பியினருக்கு இதைத் தவிர எதுவும் செய்யத் தெரியாது. அவர்கள் இலங்கை வரலாற்றில் இந்த நாட்டை அழித்து நாசம் செய்தவர்கள். அரச ஊழியர்களைக் கொலை செய்தார்கள்; அரச கட்டடங்களுக்குத் தீ வைத்தார்கள். விடுதலைப்புலிகள்கூட இந்தளவு சேதத்தை நாட்டுக்கு ஏற்படுத்தியது கிடையாது.

எமது ஆட்சியில் ஏற்பட்ட சில தவறுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. அதை நாம் இப்போது சீர்செய்து கொண்டு வருகின்றோம்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து மிகத் திறமையானவரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்துள்ளோம். அவர் வந்ததன்பின் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை உணர முடிகின்றது.

இன்று எரிபொருளுக்கான வரிசை இல்லை. எரிபொருள்களின் விலைகளும் கட்டம் கட்டமாகக் குறைந்து வருகின்றன. சுற்றுலாத் துறை மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெறும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. 2.9 பில்லியன் அமெரிக்க டொலரைத் தருவதற்கு அந்த நிதியம் இணங்கியுள்ளது. மேலும் பல நாடுகளிடம் உதவி கோரப்பட்டுள்ளது. அந்த உதவிகளும் விரைவில் கிடைக்கும்.

இந்தநிலையில், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது அர்த்தமற்ற ஒன்று. அதனால் எங்களது பொருளாதாரம்தான் பாதிப்படையும். பொருளாதாரநிலைமை மெல்லமெல்ல தலைதூக்கும்போது நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அதைத் தூக்கிவிட வேண்டும். தள்ளிவிடக்கூடாது. அது முழு நாட்டையும் பாதிக்கும் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2022 இல் வெளியிடப்பெற்றது.